# புதிய உடன்படிக்கை - முழுமையான மன்னிப்பு

> *ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், ... உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி. 10:19-22அ).*

சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு பாவமன்னிப்பைப் பற்றி வேதாகமத்தில் மிகச் சிறிதளவே வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பலிகள் செலுத்தப்பட்டன; இருப்பினும் இந்த பலிகளின் மிகச் சரியான நோக்கம் வெளிப்படுத்தப்படவில்லை. காயீனும் ஆபேலும் செலுத்திய பலியானது (ஆதி. 4:3, 4) பாவ நிவாரணப் பலியாய் இருந்திருக் கலாம், ஆனால் அவை ஸ்தோத்திரப் பலியாகவோ அல்லது உற்சாக பலியாகவோ கூட இருந்திருக்கலாம் (லேவி. 7:12, 16). நோவா (ஆதி. 8:20), ஆபிரகாம் (ஆதி. 22:13), யாக்கோபு (ஆதி. 31:54; 46:1) மற்றும் எத்திரோ (யாத். 18:12) ஆகியோரின் பலிகள் பாவநிவாரணப் பலிகளாய் இல்லாதிருந்திருக்கலாம்; ஆனால் யோபு தமது பிள்ளைகளினிமித்தம் செலுத்தியது பாவநிவாரணப் பலிகளாய் இருந்தன என்று நாம் அறிகின்றோம் (யோபு 1:5).

## நியாயப்பிரமாணத்தின் கீழ் மன்னிப்பு

வெளிப்படையாகச் செய்யப்பட்ட பாவங்களுக்கு நியாயப்பிரமாணத் தின் கீழ் மரண தண்டனை அளிக்கப்பட வேண்டியதாக இருந்தது.

> அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போகவேண்டும். அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி, அவர் கற்பனையை மீறினபடியால், அந்த ஆத்துமா அறுப்புண்டு போகவேண்டும்; அவன் அக்கிரமம் அவன்மேல் இருக்கும் என்று சொல் என்றார் (எண். 15:30, 31).

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே" (எபி. 10:28) என்று நாம் வாசிக்கின்றோம். மீறி நடப்பவர்களுக்கு இரக்கம் எதுவும் காண்பிக்கப்படவேண்டியிராதிருந்தது, மற்றும் தண்டனையிலிருந்து ஒருவரை விடுவிப்பதற்கு (அபராதக்) கட்டணம் எதுவும் அனுமதிக்கபடாதிருந்தது. கொலைகாரனுக்குத் தண்டனை பற்றிய பிரமாணமானது, "சாகிறதற்கேற்ற குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய ஜீவனுக்காக நீங்கள் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது; அவன் தப்பாமல் கொலை செய்யப்பட வேண்டும்" (எண். 35:31) என்று எடுத்துரைத்தது.

## பாவத்திற்குப் பலி

எண்ணாகமம் 15ன்படியாக, ஒரு கட்டளையை அறியாமல் மீறியவர்கள் மன்னிக்கப்படுவதற்காகப் பலி செலுத்த முடிந்திருந்தது. தேவன் அவர்களுக்குப் பின்வருமாறு கூறினார்:

> கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படியும், கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளை கொடுத்த நாள்முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல், அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவ நிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் செலுத்த வேண்டும். அதனால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்காகவும் பாவ நிவிர்த்தி செய்யக்கடவன்; அது அறியாமையால் செய்யப்பட்டபடியாலும், அதினிமித்தம் அவர்கள் கர்த்தருக்குத் தகன பலியையும், பாவ நிவாரண பலியையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்ததினாலும், அது அவர்களுக்கு மன்னிக்கப்படும். அது அறியாமையினாலே ஜனங்கள் யாவருக்கும் வந்தபடியால், அது இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்கும் மன்னிக்கப்படும். ஒருவன் அறியாமையினாலே பாவஞ் செய்தானாகில், ஒரு வயதான வெள்ளாட்டைப் பாவ நிவாரண பலியாகச் செலுத்தக்கடவன். அப்பொழுது அறியாமையினால் பாவஞ்செய்தவனுக்காக ஆசாரியன் பாவ நிவிர்த்தி செய்யும்படி கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக் கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும் (எண். 15:22-28).

பாவநிவாரணப் பலி மற்றும் குற்ற நிவாரணப்பலி ஆகியவை பற்றிய பிரமாணங்கள் லேவி. 4:1-7:10ல் மிகவும் விபரமாய்த் தரப்பட்டுள்ளன. பாவநிவாரணப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்பு பாவம் செய்தவரின் பாவமானது "மன்னிக்கப்படும்" (லேவி. 4:20, 26, 31, 35; 5:10, 13, 16, 18; 6:7; 19:22) என்று தேவன் உறுதிப்படுத்தினார். பாவங்கள் மன்னிக்கப் பட்டாலும், மிருகங்களின் இரத்தமானது அவற்றை மன்னிக்கவில்லை.

*முதலாம் உடன்படிக்கையின் கீழ்ப் பாவஞ் செய்திருந்தவர்களையும் சிலுவையில் இயேசுவின் மரணம்தான் மன்னித்தது (ரோமர் 3:25; எபி. 9:15).*

## காளைகள் மற்றும் வெள்ளாடுகளின் இரத்தம்

*"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே" (எபி. 10:4) என்று புதிய ஏற்பாடானது தெளிவாக எடுத்துரைக்கின்றது. மிருகங்களின் இரத்தமானது பாவங்களை மன்னிக்க முடியாதிருந்தது என்றால், "பாவம் ... மன்னிக்கப் படும்" என்று பிரமாணத்தில் உள்ள கூற்றானது (எ.கா. லேவி. 4:20, 26, 30, 35ஐக் காணவும்) பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்ததில்லை ஆனால் எதிர்காலத்தில் மன்னிக்கப்படும் என்று மறைமுகமாக உணர்த்தியதா?*

*பழைய ஏற்பாட்டில் உள்ள சில கூற்றுகள், தேவன் அந்தக் காலத்தின் பொழுதே பாவங்களை மன்னித்தார் என்று தெளிவாகப் போதிக்கின்றன. தேவனிடத்தில் மோசேயின் ஜெபமும் அதற்கு அவருடைய பதிலும், தேவன் சிலுவைக்கு முன்னதாகவே பாவங்களை மன்னித்தார் என்று சுட்டிக்காட்டுகின்றன. "உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியே யும், எகிப்தை விட்டது முதல் இந்நாள் வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை, மன்னித்தருளும்" என்றான். அப்பொழுது கர்த்தர்: "உன் வார்த்தையின் படியே மன்னித்தேன்" (எண். 14:19, 20). தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்த பிறகு, அவரிடத்தில் நாத்தான், "நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்" (2 சாமு. 12:13ஆ) என்று உறுதிப்படுத்தினார். இஸ்ர வேலர்கள் "தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளா. 7:14) என்று தேவன் சாலொமோனிடம் கூறினார்.*

*பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் மக்களின் பாவங்களை மன்னித்தார் என்று சுட்டிக்காட்டும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதை அவர் இயேசுவின் மரணத்தின் அடிப்படையில் செய்ய முடிந்தது, ஏனென்றால், அவருடைய மரணமானது அது நடப்பதற்கு முன்பாகவே தேவனைப் பொறுத்தமட்டில் அது நடந்து விட்டிருந்த நிச்சயமுடையதாய் இருந்தது. இயேசுவின் மரணத்தைத் தேவன் முன்னதாகவே (ஏசா. 53:4-12; அப். 2:23), படைப்புக்குக் கூட முன்னதாகவே (1 பேது. 1:18-20) திட்டமிட்டிருந்தார்.*

*கடந்த காலத்தின் பாவங்களை மன்னிப்பதில் தேவன் நீதியுள்ளவராய் இருந்ததை அவர் இயேசுவின் மரணத்தின் மூலமாகக் காண்பித்தார். "தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்" (ரோமர் 3:25அ). இயேசுவின் மரணமானது புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ளவர்களின் பாவங்களை மன்னிப்பது மட்டுமின்றி, முதலாம் உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களுக்கு*

மன்னிப்பின் அடிப்படையாகவும் இருந்தது. இவ்விதமாக, நியாயப் பிரமாணம் வாக்குத்தத்தம் செய்திராத ஒரு ஆசீர்வாதமான நித்திய சுதந்தரத்தை இஸ்ரவேலர்களும் பெற முடிந்திருந்தது. "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி. 9:15).

சுய தகுதிகள் அல்லது பலிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமின்றி, உலகத்தின் பாவங்களுக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தின் அடிப்படையில் தேவன் இஸ்ரவேலரின் பாவங்களை மன்னித்தார் (1 யோவா. 2:2). எல்லாக் காலங்களிலுமே பாவமன்னிப்பானது இயேசுவின் இரத்தத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22ஆ). இயேசுவின் இரத்தமே பாவங்களை மன்னிக்கக் கூடிய ஒரே இரத்தம் ஆகும்.

## புதிய ஏற்பாட்டின் கீழ் மன்னிப்பு

தேவனுடைய இயல்புக்கு முற்றிலும் முரணான பாவமானது அவருடைய கொந்தளிக்கும் வெறுப்பைத் தூண்டிக் கிளறி விடுகின்றது:

> சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லா வித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 1:18).

> விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய இராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக் கிறீர்களே.
>
> இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபே. 5:5, 6).

> ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபக்கினை வரும் (கொலோ. 3:5, 6).

தேவ கோபமானது ஊற்றப்படும், ஏனென்றால் நியாயப்பிரமாணத்தை மீறுதல் (எபி. 1:9) என்ற பாவத்தை (1 யோவா. 3:4) கர்த்தர் வெறுக்கிறார்.

பாவமானது தேவகோபத்தினால் சந்திக்கப்படுவது மட்டுமின்றி, அது நம்மைத் தேவனிடத்திலிருந்து விலக்கிப் பிரிக்கின்றது. பவுல், "முன்னே

அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை" (கொலோ. 1:21) என்று எழுதினார். மேலும் அவர், மன்னிக்கப் படாத பாவிகள் "புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய்'' (எபே. 4:18) உள்ளனர் என்றும் உரைத்தார். அவர்கள், ''கிறிஸ்துவைச் சேராதவர்களும் ... தேவனற்றவர்களும் ... தூரமா யிருந்த"வர்களுமாய் (எபே. 2:12, 13) உள்ளனர். மற்றும் "தேவனுக்குச் சத்துருக்களாகவும்" (ரோமர் 5:10) உள்ளனர். "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" (யாக். 4:4) என்று யாக்கோபு எழுதினார்.

## நமது மன்னிப்பிற்காக இயேசுவின் தியாகம்

மனிதரின் கிரியைகளும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளும் பாவத்தையோ அல்லது தேவ கோபத்தையோ நீக்க முடியாது. இது சாத்தியமென்றால், இயேசு சிலுவையில் மரித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ''நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே'' (கலா. 2:21) என்று எழுதினார். மேலும் அவர், ''நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே'' (கலா. 3:10ஆ) என்றும் கூறினார். நியாயப்பிரமாணமானது துணிகரமான தவறுகளை அனுமதித்த தில்லை; அது இரக்கம் அளித்ததில்லை (கலா. 5:4; எபி. 10:28). இவைகள் இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே அளிக்கப்பட முடியும். மனிதரு டைய பகுதியில் இருந்து ஏதொன்றும் பாவங்களை மன்னிக்க முடியாது. பழைய பாடல் ஒன்று கூறுகின்றபடி, "என் பாவத்தை நீக்கிட இயேசுவின் இரத்தம் தானே."[1] நமது பகுதியில் தக்க பதில்செயல் இல்லாமல் நாம் சுத்திகரிக்கப்பட முடியாதிருக்கும்போது, இயேசுவின் இரத்தம் மட்டுமே பாவங்களை எடுத்துப்போட முடியும்.

இயேசுவின் இரத்தத்தின் மூலம் (மத். 26:28; 1 யோவா. 1:7; வெளி. 1:5) ஒரு புதிய ஜீவனுள்ள மார்க்கத்தின் மூலம் (எபி. 10:19, 20) நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்தியதில் நமது பாவங்களுக்கு விலை செலுத்தி (ரோமர் 6:23; 1 பேது. 1:18-20) தேவகோபத்தை நீக்குவதைச் சாத்தியமாக்கினார். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக் கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சய மாமே" (ரோமர் 5:9). அவருடைய இரத்தமானது தேவனுக்கும் நமக்கும் இடையில் சமாதானத்தைக் கொண்டுவரும் ஒரு ஒப்புரவாக்குதலையும் சாத்தியமாக்குகின்றது (கொலோ. 1:20) எனவே இயேசு நம்மை "பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன்பாக" நிறுத்த முடிகின்றது (கொலோ. 1:21). "அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (எபி. 13:12).

### நமது கீழ்ப்படிதலுள்ள பதில்செயல்

இயேசுவின் இரத்தம் மட்டுமே நமது இரட்சிப்பை அளிக்க முடியும் (அப். 4:12). அவர் சாத்தியமாக்கியுள்ள ஆவிக்குரிய வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் நமது நம்பிக்கையை அவரில் வைக்க வேண்டும். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்ற வேண்டும். யோவான் 3:36, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனா யிருக்கிறான்; குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் ..." என்று கூறுகின்றது. வசனத்தின் இம்மொழிபெயர்ப்பு சரியானதாக உள்ளது. KJV (தமிழிலும்) "குமாரனை விசுவாசியாதவன்" என்று கூறுகின்றது, மற்றும் NIVயானது "குமாரனை மறுதலிக்கிறவன்" என்று கூறுகின்றது. இவ்விடத்தில் பயன்படுத்தப்படும் apeitheo என்ற வார்த்தை "கீழ்ப்படியாத" என்று அர்த்தப்படுகின்றது; இவ்வசனத்தில் "விசுவாசியாத" என்று அர்த்தப் படுகின்ற apisteo என்ற வார்த்தை அடங்கியிருக்கவில்லை.

இயேசு, "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகினார்" (எபி. 5:9). இயேசு ஒருபோதும் பூரணரற்றவராய் இருந்ததில்லை. "பூரண" என்ற வார்த்தை "அதன் முடிவை அடைந்து, முழுமையாகி" என்று அர்த்தப்படும் teleios என்பதாக உள்ளது. மனிதரை இரட்சிப்பதற்கான அவருடைய ஊழிய மானது அவரது இரத்தம் சிந்துதலுடன் முழுமையடைந்து, முடிக்கப் பட்டது (யோவா. 19:30). நமது இரட்சிப்புக்கு விலை செலுத்தியதில் அவர் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு இரட்சிப்பின் மூல ஆதாரமானார். எல்லா மன்னிப்பும் இயேசுவின் இரத்தத்தின் அடிப்படையிலேயே உள்ளது, வேறு வழியில் இது சாத்தியமாய் இராது, ஏனெனில் "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22).

நாம் செய்ய முடிகின்ற எதுவும் நமது இரட்சிப்பை உண்டாக்க இயலாததாக உள்ளது; பதிலாக, இயேசு தாம் ஏற்படுத்தியுள்ள இரட்சிப்பைத் தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் தருகின்றார். நாம் கிருபையின் மூலமாக, தகுதியற்ற நிலையில் தேவனுடைய ஈவாகத் தரப்பட்ட கிருபையின் மூலம் இரட்சிக்கப்படுகின்றோம் - நமது கிரியை களின் மூலமாக அல்ல, ஆனால் இயேசுவின் கிரியையின் மூலமாகவே இரட்சிக்கப்படுகின்றோம் (எபே. 2:8, 9). இயேசுவின் சித்தத்திற்குப் பதில்செயல் செய்வதினால், அவர் சிலுவையில் தம்முடைய மரணத்தில் சிந்திய இரத்தத்தின் மூலம் நமக்கு அளித்துள்ள இரட்சிப்பை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே சுவிசேஷம் என்ற நற்செய்தியாக உள்ளது. இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் - சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படி மாட்டார்கள் - கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெச. 1:8, 9).

இயேசுவே நமது ஒப்புரவாக்கும் பலியாக உள்ளார், இயேசுவின் இரத்தத்தின் (ரோமர் 3:25) மீதுள்ள நமது விசுவாசத்தின் மூலமாக தேவன் நம்மைச் சந்தித்து நமது பாவங்களில் இருந்து நம்மைத் துப்புரவாக்கும்

கிருபாசனமும் அவரே (எபி. 9:5). இயேசு நமக்குச் செய்துள்ளவற்றின்மீது நாம் விசுவாசம் வைக்க வேண்டுமே தவிர, தேவனுக்கென்று நாம் நமது சொந்தத்தில் செய்யக் கூடியவைகளில் அல்ல. விசுவாசத்தின் மூலமாக நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகின்றோம் (எபே. 2:8, 9). நாம் “விசுவாசத்தினாலே இந்தக் கிருபைக்குள்” பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம் (ரோமர் 5:2).

இருப்பினும் தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் விசுவாசமானது தேவனுடைய சித்தத்திற்கு நம்மைக் கீழ்ப்படிதலுடன் பதில்செயல் செய்யத் தூண்டும் ஒரு விசுவாசமாக உள்ளது. புதிய உடன்படிக்கையின் கீழ், தேவன் கேட்கும் விசுவாசத்திற்கான பதில்செயலானது மனந்திரும்புதல் (அப். 17:30), இயேசுவில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிடுதல் (ரோமர் 10:9, 10), மற்றும் ஞானஸ்நானம் (மாற். 16:15, 16; அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13; 1 பேது. 3:21) ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கின்றது.

இயேசு நம்மிடத்தில் கேட்டுக் கொள்ளும் எதுவும் நமது பாவங்களை நீக்க முடியாது. இயேசுவின் இரத்தம் மட்டுமே அதைச் செய்ய முடியும்; இருந்த போதிலும், நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் வரையிலும் அவர் நமது பாவங்களை நீக்க மாட்டார். அணிவகுத்துச் செல்லுதல், உரத்த சத்தமிடுதல், மற்றும் எக்காளங்களை ஊதுதல் ஆகியவை மட்டும் எரிகோ நகர மதில்களை விழச் செய்ய முடியாதிருந்தது போலவே (எபி. 11:30), நமது விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை நமது பாவங்களை நீக்கப் போதுமானவைகளல்ல. இஸ்ரவேலரின் விசுவாசமானது அவர்கள் தேவனுடைய கட்டளைக்குப் பதில்செயல் செய்யத் தூண்டியது, மற்றும் அவர்கள் செயல்பட்ட பொழுது பலன் அளிக்கப்பட்டனர். அதே வழிமுறையில், நாம் மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும் பொழுது நமது விசுவாசத்திற்குப் பலன் அளிக்கப்படுகின்றது. நாம் தேவனுடைய சித்தத்திற்குப் பதில்செயல் செய்யும் பொழுது, அவர் செய்கின்றது எதுவோ அது நமது இரட்சிப்பை உண்டாக்கும் என்ற விசுவாசம் கொண்டிருக்கின்றோம்; நமது விசுவாசம் நமது சொந்த செயல்களில் இருப்பதில்லை. பவுல் பின்வருமாறு கூறினார்:

> அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து … (கொலோ. 2:11-13).

நாம் ஞானஸ்நானத்தில் அவரோடு கூட அடக்கம் பண்ணப்படும்

போது “தேவனுடைய கிரியைகளின்” மேல் நமது விசுவாசம் இருக்க வேண்டும். இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்ததில் தேவன் இயேசுவை மரணத்திலிருந்து வாழ்வுக்குக் கொண்டு வரும் தம்முடைய வல்லமையைச் செயல் விளக்கப்படுத்தினார். இயேசுவை உயிர்ப்பித்ததில் தேவன் செய்த செயலின் அடிப்படையில் அவரது வல்லமையானது நாம் ஞானஸ்நானத்தில் தேவன் நம்மை ஆவிக்குரிய மரணத்திலிருந்து வாழ்வுக்குக் கொண்டு வர வாக்குத்தத்தம் செய்துள்ளதால், நாம் ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய கிரியையானது நாம் ஆவிக்குரிய முறையில் வாழ்விக்கும் என்று விசுவாசம் கொண்டிருக்க முடியும். நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது, நாம் நிறைவேற்றியவைகளில் அல்ல ஆனால் தேவன் செய்கின்றவைகளிலேயே நமது விசுவாசத்தை வைக்க வேண்டும். இந்தத் தேவையை நாம் நிறைவேற்றும் பொழுது தேவன் நமக்கு ஆவிக்குரிய வாழ்வை அளித்து நமது எல்லா மீறுதல்களையும் மன்னிக்கின்றார்.

நமக்கு புதிய ஜீவன் அளிக்கவும் நமது பாவங்களை மன்னிக்கவும் நாம் இயேசுவின் இரத்தம் மற்றும் தேவனுடைய வல்லமை ஆகியவற்றின் மீது விசுவாசம் கொள்ளும்படி மட்டுமே கேட்டுக் கொள்ளப்படுவதில்லை; அதற்கும் அப்பால், நாம் இயேசுவுக்காகப் புதிய வாழ்க்கை ஒன்றை வாழும்படி நமது கடந்த கால வாழ்வுக்கு மரிக்க வேண்டும் என்று நம்மிடத்தில் தேவன் கேட்டுக் கொள்கின்றார். ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம்பண்ணப்படும் வேளையில் நாம் நமது கடந்த வாழ்க்கைக்கு மரிக்கின்றோம்; பிறகு நாம் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடக்க முடியும் (ரோமர் 6:4). சுவிசேஷத்தில் அடங்கியுள்ள உபதேச சட்டங்களுக்கு நாம் மனப்பூர்வமாகக் கீழ்ப்படியும் பொழுது (ரோமர் 6:17, 18), நமது பழைய மனிதன் கிறிஸ்துவுடன் கூடச் “சிலுவையில் அறையப் படுகின்றான்.” “நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக” (ரோமர் 6:6) தேவன் இந்தத் திட்டத்தை வடிவமைத்தார்.

கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட வசனத்திலிருந்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொள்வதின் அடிப்படையிலேயே நமது விசுவாசம் இருக்க வேண்டும் (ரோமர் 10:17). அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளின் மூலமாகவே நாம் இயேசுவின் மீது விசுவாசம் கொள்ள முடியும் என்று அவரே உரைத்தார் (யோவா. 17:20). இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக பெரோயாவில் இருந்த மக்கள், “மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் … நற்குணசாலிகளாய் இருந்தார்கள். அதனால் அவர்களில் அநேகம் பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்” (அப். 17:11, 12).

## கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய நபர்

நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்பொழுது (ரோமர் 6:3;

*கலா. 3:27) அவருக்குள் புதிய மக்கள் ஆகின்றோம் (2 கொரி. 5:17). கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்கள் சபை என்ற (எபே. 1:22, 23; கொலோ. 1:18, 24) கிறிஸ்துவின் ஒரே சரீரமாய் இருக்கின்றனர் (ரோமர் 12:5). ஞானஸ்நானமானது நம்மைக் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தினுடைய அவயங்களாக்குகின்றது (1 கொரி. 12:13, 27).*

*நாம் ஆவியினாலும் தண்ணீரினாலும் மீண்டும் பிறந்தால் அன்றி, தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது (யோவா. 3:5). மறுபடியும் பிறந்தவர்களே கிறிஸ்துவின் சரீரமாகிய (எபே. 1:22, 23; கொலோ. 1:18, 24) சபையில் (எபி. 12:23) "முதற் பேறானவர்களாய்" உள்ளனர். அவர்களே கிறிஸ்துவின் ராஜ்யத்தில் குடிமக்களாய் உள்ளனர் (எபே. 2:19; கொலோ. 1:13). இந்தப் புதிய ஜீவனுள்ளவர்கள் கிறிஸ்து கட்டிய (மத். 16:18) மற்றும் அவருக்குக் கீழ்ப்படிகிற (எபே. 5:24) கிறிஸ்துவின் சபையாராக உள்ளனர். இந்த சபையின் உறுப்பினர்கள் கிறிஸ்துவால் அன்புகூரப்பட்டு (எபே. 5:25) உள்ளனர், மற்றும் ஒருநாளில் அவருக்கு ஒப்புவிக்கப்படுவார்கள். அவர்களை அவர் தம்முடைய இரத்தத்தின் வல்லமையால் (கொலோ. 1:20ஐக் காணவும்) பரிசுத்தமும் பிழையற்றவர்களுமாய் இருக்கும்படி (எபே. 5:27) கறைதிரை முதலான எதுவுமற்றவர்களாக்கினார்.*

## *முடிவுரை*

*கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் கீழ்ப் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்குத் தேவையான செயல்முறைகள் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் போதிக்கப்பட்டவைகளில் இருந்து மாறுபடுகின்றன. இஸ்ரவேலர்கள் தங்கள் பாவமன்னிப்புக்கு அடையாளப் பலியாக மிருகத்தின் இரத்தத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தது, ஆனால் இயேசுவின் இரத்தமே அவர்களின் பாவங்களை மன்னித்தது. அது போலவே, நாம் இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் கொண்டு மக்களுக்கான அவரது இன்றைய நாளின் வேண்டுகோள்களுக்குக் கீழ்ப்படியும் பொழுது, புதிய ஏற்பாட்டின் கீழ்க் கிறிஸ்தவர்களாகின்றவர்களை இயேசுவின் இரத்தம் மன்னிக்கின்றது.*

*இந்த தேவையானவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் நமது பாவம் நிறைந்த வழிமுறைகளை மாற்றிக் கொண்டு இயேசுவுக்காக வாழ்வதற்குத் தீர்மானம் செய்து, அவர் மீதுள்ள நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழ வேண்டும் (அப். 2:38; கொலோ. 2:12). நாம் பெற்றுக் கொண்ட மன்னிப்பானது நாம் கிறிஸ்தவர்களான பின்பு ஒளியில் நடந்து கொண்டு நமது பாவங்களை அறிக்கையிட்டால் நமக்கு மன்னிப்பு இருக்கிறது (அப். 8:22; 1 யோவா. 1:7-9). புதிய உடன்படிக்கையின் கீழ் பாவமன்னிப்பிற்கு வேறு வழிமுறைகள் எதுவும் அளிக்கப்படுவதில்லை.*

குறிப்பு

[1]Robert Lowry, "Nothing But the Blood," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

## சிலுவையில் இருந்த குற்றவாளி மன்னிக்கப்பட்டது பற்றிய விஷயம்

புதிய உடன்படிக்கையின் தெளிவான போதனைகளைப் பலர் புறக்கணிக்கின்றனர், ஏனென்றால் அவர்கள், இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரு குற்றவாளிகளில் ஒருவர் ஞானஸ்நானமின்றியே இரட்சிக்கப்பட்டதாக நம்புகின்றனர். இந்த மனிதன் (குற்றவாளி) புதிய உடன்படிக்கையின் கீழான இரட்சிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பதில்லை. உண்மையில் இவர் தேவனுடன் ஒப்புரவாகுவதற்கு நியாயப் பிரமாணத்தினுடைய அல்லது இயேசுவின் புதிய உடன்படிக்கையினுடைய வேண்டுகோள்கள் எதையும் நிறைவேற்றியிருந்ததில்லை.

இயேசு இந்தப் பூமியில் இருந்த வேளையில், தமக்குப் பிரியமான எந்த நிபந்தனைகளின் கீழும் தாம் தேர்ந்து கொண்ட விதத்தில் பாவங்களைச் சுயாதீனமாக மன்னித்தார். எடுத்துக்காட்டாக, அவர் திமிர்வாதக்காரனுடைய பாவங்களையும் (மத். 9:2-8; மாற். 2:3-12; லூக். 5:17-26) மற்றும் தம்முடைய பாதங்களைக் கழுவிய ஒரு பெண்ணின் பாவங்களையும் (லூக். 7:44-50) மன்னித்தார். இந்தத் தனிநபர்கள் விசுவாசம் கொண்டிருந்தனர், ஆனால் மன்னிக்கப் படுவதற்கு நாம் கொண்டிருக்க வேண்டிய விசுவாசத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. நமது விசுவாசம் இயேசுவின் இரத்தத்தின் மீதும் (ரோமர் 3:25) மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலின் மீதும் (ரோமர் 10:9) இருந்தாக வேண்டும். சிலுவையிலறையப்பட்ட குற்றவாளியைப் போலவே இந்த மக்களும் நியாயப்பிரமாணம் அல்லது இயேசுவின் உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நிபந்தனைகள் இன்றியே மன்னிக்கப்பட்டனர்.

இயேசு மன்னித்த இவர்கள் யாவரும் புதிய உடன்படிக்கை அமுலுக்கு வரும் முன்பாகவே பாவமன்னிப்பை பெற்றிருந்தார்கள். பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலானது இயேசுவின் நாமத்தில் சகல தேசத்தாருக்கும் அப்பொழுது பிரசங்கிக்கப்படாதிருந்தது (லூக். 24:47). இந்தக் காரணத்தினால், இந்தத் தனிநபர்கள் இரட்சிக்கப்படுவதற்குப் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய முடியாதிருந்தது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பாவமன்னிப்பை முதன் முதலில் பிரசங்கித்தவரான பேதுரு, மக்களிடத்தில் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது

பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்று கூறினார். நடபடிகளின் புத்தகம் முழுவதிலும் சுவிசேஷத்திற்குப் பதில்செயல் செய்தவர்கள் பேதுருவினால் கட்டளையிடப்பட்டவைகளைச் சீராகச் செய்தனர் (அப். 2:41; 8:12, 36-39; 9:18; 10:47, 48; 16:15, 33; 18:8). சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளியல்ல, இந்தத் தனிநபர்களே நாம் மன்னிக்கப்படுவதற்கு சுவிசேஷத்திற்கு எவ்விதம் பதில்செயல் செய்ய வேண்டும் என்பதற்கு நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றனர். அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் அர்ப்பணிக்கப்பட்டிருந்த புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்திருந்தனர், மாற்கு 16:16ல் இயேசுவும் கூட, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று போதித்தார்.